


12.07.2024

தலைப்புச் செய்திகள்

1. மத்திய பாதுகாப்பு படையில் முன்னாள் அக்னி வீரர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2. சர்வதேச அளவில் இந்தியா 3ஆவது பொருளாதார நாடாக விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

3. மதுபான கொள்கை தொடர்பான வழக்கில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு உச்சநீதிமன்றம் இன்று இடைக்கால ஜாமீன் வழங்கியுள்ளது.

4. தமிழ்நாட்டில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் வேலை வாய்ப்புகளை பெறுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. ஜெர்மனியில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ஈக்வடாரின் எஸ்கோபார் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழு

அக்னி வீரர்கள்

மத்திய பாதுகாப்பு படைபிரிவில் அக்னி வீரர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

அக்னிபாத் குறித்த விவாதங்கள் நடைபெற்று வரும் நிலையில் முன்னாள் அக்னி வீரர்களுக்கு இந்த இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று மத்திய பாதுகாப்பு படை அறிவித்துள்ளது.

அக்னி வீரர்களுக்கு உடல் தகுதி தேர்வு நடத்தப்படமாட்டாது என்றும், அவர்களுக்கான வயது வரம்பில் சலுகைகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அக்னி வீரர்களை மத்திய ஆயுத காவல்படையில் தேர்வு செய்ய உள்துறை அமைச்சகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மத்திய தொழில் பாதுகாப்பு படையின் தலைமை இயக்குனர் நயினாசிங் கூறியுள்ளார்.

ழூழூழூழூழூழூழூழூழூ

ராஜீவ் ரஞ்ஜன்சிங்

மதுரையில் மத்திய மீன்வளத்துறையின் சாதனைகளை எடுத்துரைக்கும் மீன்வள கோடைகால மாநாட்டை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு.ராஜீவ் ரஞ்ஜன்சிங் இன்று தொடங்கிவைத்தார்.

மீன்வளத்துறையின் எதிர்கால வளர்ச்சியை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு நடைபெறுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன் ஒருபகுதியாக மீன்வளர்ப்பு தொழில்நுட்ப கண்காட்சியை திரு.ராஜீவ் ரஞ்சன்சிங் இணை அமைச்சர்கள் திரு.எஸ்.பி.சிங் பாகேல், திரு.ஜார்ஜ் குரியன் ஆகியோர் இணைந்து தொடங்கிவைத்தனர்.

உத்திரபிரதேசம், பீகார், அஸ்ஸாம், மேகாலயா, அருணாச்சல பிரதேசம் ஒடிசா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மீன்வள அமைச்சர்கள் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்நிகழ்வின் போது 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 125 மீன்வளத்துறை சார்ந்த திட்டங்கள் காணொலி மூலம் தொடங்கப்பட்டதோடு ஒருங்கிணைந்த அலங்கார மீன்வளர்ப்பு பிரிவில் மதுரையை சேர்ந்த 5 பயனாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மீன்வள உற்பத்தி அமைப்புகள் மற்றும் மீன்வள கூட்டுறவு சங்கங்களை ஒருங்கிணைப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

ழூழூழூழூழூழூழூழூழூ

சரக்கு கப்பல்

சர்வதேச அளவில் இந்தியா முதல் 3 பொருளாதார நாடுகளில் ஒன்றாக விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய கப்பல் போக்குவரத்து

துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரம் விழிஞ்ஞம் சர்வதேச துறைமுகத்தில் சான் ஃபெர்னான்டோ பிரம்மாண்ட சரக்கு கப்பலை இன்று வரவேற்று பேசிய அவர், பிரதமர் திரு.நரேந்திரமோடியின் வளர்ச்சிக்கான இலக்குகளை எட்ட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

துறைமுக சரக்கு கப்பல் செயல்பாட்டு குறியீட்டில், உலக அளவில், முதல் 100 இடங்களில், 9ஆவது இடத்தை கொச்சி துறைமுகம் பெற்றுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

மனோகர் லால்

மத்திய பொதுப்பணிகள் துறையின் திட்டங்களை தரத்துடனும், உரிய காலத்திலும் முடிப்பது உறுதி செய்வது அவசியம் என்று மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மத்திய பொதுப்பணித்துறையின் 170ஆவது ஆண்டு விழா கொண்டாட்டத்தில் இன்று உரையாற்றிய அவர் திடட்ங்களில் வெளிப்படைத்தன்மை தேவை என்று குறிப்பிட்டார்.

கட்டமைப்பு திட்டங்கள் குறைந்த செலவில் தரத்துடன் அமைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நவீன தொழில்நுட்பங்களை பொறியாளர்களும், பொதுப்பணித்துறையினரும் நடைமுறை படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

நீட்

நீட் இளநிலை மருத்துவ நுழைவு தேர்வில் கேள்வித்தாள் கசிவு தொடர்பாக அஸாரிபக் ஒயாசிஸ் பள்ளி முதல்வர் அக்ஸானுல், ஹேக் உட்பட 4 பேர் சிபிஐ காவலுக்கு பின்னர் பாட்னா சிறையில் அடைக்கப்பட்டனர்.

சென்ற மாதம் 28ஆம் தேதி கைது செய்யப்பட்ட இவர்களிடம் விரிவான விசாரணை நடைபெற்ற நிலையில், பாட்னாவில் உள்ள கெம்னிச்சக்

பள்ளியிலிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிளரிந்த கேள்வித்தாள், தேசிய தேர்வு முகமையின் கேள்வித்தாளோடு ஒத்திருந்தது கண்டறியப்பட்டது.

ழூழூழூழூழூழூழூழூழூ

அரவிந்த் கெஜ்ரிவால்

மதுபான கொள்கை தொடர்பான பண மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட டெல்லி முதலமைச்சரும், ஆம் ஆத்மி கட்சி தலைவருமான அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு உச்சநீதிமன்றம் இன்று இடைக்கால ஜாமீன் வழங்கி உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பான அமலாக்க இயக்குனரகத்தின் கைது நடவடிக்கைக்கு எதிராக திரு.கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, திபாங்கர் தத்தா ஆகியோர் கொண்ட அமர்வு, கூடுதல் நீதிபதிகள் அமர்விற்கு இவ்வழக்கை பரிந்துரைத்துள்ளது.

இருப்பினும் மதுபான கொள்கை தொடர்பாக லஞ்ச ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ், மத்திய புலனாய்வு குழுவும், கெஜ்ரிவாலை சென்ற மாதம் 25ஆம் தேதி கைது செய்திருப்பதால் திரு.கெஜ்ரிவால் தொடர்ந்து நீதிமன்ற காவலில் வைக்கப்படுகிறார்.

திரு.கெஜ்ரிவால் கடந்த மார்ச் 21ஆம் தேதி அமலாக்க இயக்குனரகத்தால் கைது செய்யப்பட்டு தேர்தல் பரப்புரைக்காக கடந்த மே 10 ஆம் தேதி உச்சீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்தார்.

தேர்தலுக்கு பின்னர் சென்ற மாதம் 2 ஆம் தேதி இவ்வழக்கில் ஜாமீன்வழங்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டதால் மீண்டும் கெஜ்ரிவால் சிறை திரும்பினார்.

ழூழூழூழூழூழூழூழூழூ

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் வேலை வாய்ப்புகளை பெற்று வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர் அரசு பள்ளி மாணாக்கர், உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் வகையில் துநுநு நுழைவு தேர்விற்கு இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கே.என்.நேரு

தமிழ்நாட்டில் பட்டா வழங்குவதில் திருச்சி மாவட்டம் இரண்டாவது இடத்தில் உள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் 248அரை கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளை இன்று துவக்கிவைத்ததுடன்,

106 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

வீடு கட்டும் திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டத்தில் 4 ஆயிரம் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

வாய்ஸ்

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாநில அரசு புதிய திட்டங்களை அறிவித்து அதன் செயலாக்கத்தை முனைப்புடன் கண்காணித்து வருவதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

மதிவேந்தன்

நாமக்கல் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகளும் நல திட்டங்களும் முறையாக செயல்படுத்தப்படுவதாக மாநில வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

தோக்கம்பாளையத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் இரண்டரை லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கான சாவியை மாற்றுத்திறனாளிக்கு அமைச்சர் வழங்கினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கயல்விழி செல்வராஜ்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து இத்துறைக்கான அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் துறைசார்ந்த அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

விக்கிரவாண்டி

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி உட்பட 7 மாநிலங்களின், 13 தொகுதிகளுக்கு, நடைபெற்ற இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நாளை காலை 8 மணிக்கு தொடங்குகிறது.

விக்கிரவாண்டி பனையபுரத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி வாக்கு எண்ணும் மையத்தில் 3 அடுக்கு பாதுகாப்புடன் அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே படகு எஞ்சின் பழுதாகியதால் கடலில் தத்தளித்த 4 மீனவர்கள் இரண்டு நாட்களுக்கு பின்னர் பத்திரமாக மீட்கப்பட்டு கரைக்கு அழைத்துவரப்பட்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம் வரும் 19ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் தற்காலிக தொகுப்பூதியத்தில் இடைநிலை பட்டதாரி மற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு வரும் 15ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 19ஆம் தேதி நடைபெற உள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் முகாம் வரும் 19ஆம் தேதி அரியலூர் வட்டத்தில் ஆட்சித்தலைவர் திருமதி ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி மற்றும் மானாமதுரை தாலுக்காக்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே எர்ணாகுளம் விரைவு ரயிலில் 14 கிலோ போதைபொருட்களை மதுவிலக்கு மற்றும் அமலாக்கப்பிரிவு காவல்துறை பறிமுதல் செய்ததோடு இரண்டு பேரை கைதுசெய்துள்ளது.

கொடைக்கானல் மன்னவனூர் கிராமத்தில் அமைந்துள்ள செம்மறி ஆடு ஆராய்ச்சி நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் இன்றுமுதல் நாளை மறுநாள் வரை சுற்றுலா பயணிகள் செல்ல தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் 28 மாநிலங்களின் பாரம்பரிய நடனங்களை இடைவிடாமல் 30 நிமிடங்களில் ஆடி ராணிப்பேட்டை வாலாஜாபேட்டை பகுதி ஜோதிகா கலாம் உலக சாதனை படைத்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

சிம்ஸ் பூங்கா

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 2ஆவது சீசனுக்காக 2 லட்சம் நாற்றுகள் நடவு செய்யும் பணிகள் தொடங்கியுள்ளதாக தோட்டக்கலைத்துறை இணை இயக்குர் சிபிலா மேரி தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக நீலகிரி கோவை திருப்பூர் திண்டுக்கல் மாவட்ட மலை பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்றும் நாளையும் கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார்வளைகுடா, தென்தமிழகம், வட தமிழகம் கடலோர பகுதிகள், மத்திய மேற்கு, வடமேற்கு வங்க கடல், அரபிக்கடல் ஆந்திர கடலோர பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

டென்னிஸ்

ஜெர்மனியில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ஈக்வடாரின் எஸ்கோபார் இணை – உக்ரைனின் டெனிஸ், நெதர்லாந்தின் மிடில் கூப் இணையை இன்று எதிர்கொள்கிறது.

ழூழூழூழூழூழூழூழூழூ

கூடைப்பந்து

கொழும்புவில் நடைபெறும் 18 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய சாம்பியன்பட்ட கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

ழூழூழூழூழூழூழூழூழூ

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழூழூழூழூழூழூழூழூழூ